முருகப்பெருமான் துணை

**மகான் முனையடுவார் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.11.2023**, திங்கட்கிழமை

1. ஞான மகா சூட்சும அரங்கா
ஞானியே அரங்கமகா தேசிகா
ஞானஉலகம் படைக்க வந்த
ஞானியே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது துலை திங்கள்
குறைவிலா இருபானேழ்திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 27 ம் நாள், 13.11.2023, திங்கட்கிழமை)
அறிவுரை ஆசி முனையடுவார் நாயனாரும்
அருளுவேன் உலகநலம் காண
3. காணவே கலியுக மக்கள்
கந்த வேலன் வழிபாட்டை
ஞான சோதி ஏற்றி செய்துமே
ஞானிகள் காட்டும் தவமுறை
4. முறையாக உலகோர் கற்று
முழுமை தரும் அன்னதானம்
குறைவின்றி உலகெலாம் துவக்கி
கிளைகளாக அரங்கன் பேரில் செய்து
5. செய்துமே ஞானிகள் பூசை
செபதபமாகச் செய்து வர
அய்யம் மனபயம் விலகி
ஆபத்தும் இடைகண்டம் விலகி
6. விலகியே சர்வ பாதுகாப்பு
வினைபற்றா ஞானவாழ்வாக
உலகம் எங்கும் அரங்கனின்
உண்மை அவதார நோக்கம்

7. நோக்கம் மக்கள் அறியும்படி
நிலவுலகில் செய்து வர
ஆக்கமுடன் எங்கும் மாற்றம்
அரங்கன் சக்தியாகத் தேறி

8. தேறியே உலகமக்கள் வாழ்வில்
தெய்வ ஞானபலம் மிக்கவர்களாக
மாறியே ஞானவான்களாக
மறுமை வெல்லும் ஞானிகளாக

9. ஆகவே ஆற்றல் கூடியே
அகிலமாற்றம் தனைபுரிவர்
வகைபட வணங்கி தீட்சை
வரமாக அடைவதன் மூலம்

10. மூலமதில் அவரவர் தனக்கு
முழுமை தரவல்ல சக்தியை
வேலவன் அருளி சடுதி
வெற்றிமிகு ஞான யுக மாற்றம்

11. மாற்றம் கண்டடைந்துமே
மகான்கள் ஆளும் ஞான ஆட்சி
ஆற்றல்பட உலகம் அடையும்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–